**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயம்**

**மேட்டுப்பாளையம்,**

**முன்னிலை : திரு. K. பழனிவேல், B.L,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை

**எம்.சி.ஓ.பி. எண் 20/2023**

**CNR.NO.TNCB19000-112-2023**

திரு. நாகராஜ், (57), த/பெ. மாதையன்,

முகவரி 5/93, M.G.R. நகர், தேரம்பாளையம், மேட்டுப்பாளையம். .... **மனுதாரர்**

**/// எதிர் ///**

1). திரு. பாபு, (45), த/பெ. ரங்கநாதன்,

முகவரி 6/55, பொகளூர் சாலை, குமரன்குன்று, தேவாங்கபுரம், மேட்டுப்பாளையம்

2). திருமதி. நதியா, (40), க/பெ. பாபு,

முகவரி 6/55, பொகளூர் சாலை, குமரன்குன்று, தேவாங்கபுரம், மேட்டுப்பாளையம்

3). Universal Sampo General Insurance Co. Ltd.,

Tristar Towers, Lakshmi Mills Junction, Avinashi road, Coimbatore - 18

..... **எதிர்மனுதாரர்கள்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 05.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. A. நவமணிராசு அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. R. கிருஷ்ணகுமார்,

அவர்கள் முன்னிலையாகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவருக்கெதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தைக் கேட்டும், இன்று இந்த தீர்ப்பாயம் பிறப்பிக்கும்

## ***உத்தரவு***

இம் மனுவானது, கடந்த 04.11.2022 அன்று சாலை விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக ரூ.10,00,000/- ம் இழப்பீடு வேண்டி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166 (1 A) ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***01). Facts relating to the claim:***

| | |
|---|---|
| *1). Claim for* | *- Grievous injury* |
| *2). Name of the injured person* | *- Nagaraj* |
| *3). Age of the Injured person* | *- 57* |
| *4). Occupation* | *- Coolie* |
| *5). Income pleaded* | *- 20,000/- Per month* |
| *6). Date of accident* | *- 04.11.2022* |
| *7). Compensation claimed* | *- 10, 00, 000/-* |
| *8). Insurance Policy Covered* | *- 25.06.2022 to 24.06.2023* |
| *9). Driving License valid for offending vehicle* | *– 19.07.2022 to 30.10.2030* |
| *10). Date of petition presented* | *- 23.01.2023* |
| *11). Date of petition taken on file* | *- 23.01.2023* |

***02). மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-***

கடந்த 04.11.2022 அன்று சுமார் 07.00 மணியளவில் அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் ரேசன் கடை முன்பு நடந்து சென்று கொண்டிந்த போது, பின்னால் வந்த TN38 CM 9754 என்ற Bolero pickup வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும்,

கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் மனுதாரர் கீழே விழுந்ததில் மனுதாரருக்கு எலும்புமுறிவும், கொடுங்காயங்களும் ஏற்பட்டன. விபத்து சமயத்தில் மனுதாரர் கூலி வேலை செய்து மாதம் ரூ. 20,000/- சம்பாதித்து வந்தார். ஆகவே, மனுதாரருக்கு ரூ. 10,00,000/- ஐ இழப்பீடாக வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டும்.

03. **3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம் :**

விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை. மேலும், மனுதாரர் பல்வேறு தலைப்புகளில் அதிகமான தொகையை இழப்பீடாக கோரியுள்ளார். ஆகவே, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

04). **இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய முக்கிய பிரச்சினைகள் பின்வருமாறு :-**

(அ) இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா?

(ஆ) மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எந்தெந்தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்?

(இ) மனுதாரருக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?

05). 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் எடுக்க வேண்டிய அனைத்து எதிர்வாதங்களையும் 3ம் எதிர்மனுதாரர் எடுக்க அனுமதி வேண்டப்பட்டதன் பேரில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170 ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

06). மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ. 12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவோ, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை.

**07). எழுவினா (அ) விற்கான விவாதமும் தீர்வும்**

**இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா?**

மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர், மனுதாரர் அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் ரேசன் கடை அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது, TN38 CM 9754 என்ற Bolero pickup வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டு மனுதாரருக்கு எலும்புமுறிவும், கொடுங்காயங்களும் ஏற்பட்டுள்ளதால் தகுந்த இழப்பீடு வழங்குமாறு மனு தாக்கல் செய்து வாதிட்டார்.

08). 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர், விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை. மேலும், அதிகமான தொகையை மனுதாரர் இழப்பீடாக கோரியுள்ளார். ஆகவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என பதிலுரை தாக்கல் செய்து வாதிட்டார்.

09). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலனை செய்ததில் கடந்த 04.11.2022 அன்று 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனம் மோதியதில் மனுதாரருக்கு எலும்புமுறிவுகளும், கொடுங்காயங்களும் ஏற்பட்டுள்ளது என்பதும், மேலும், 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

10). மனுதாரர் தனது சாட்சியத்தில் கடந்த 04.11.2022 அன்று சுமார் 07.00 மணியளவில் அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் ரேசன் கடை முன்பு நடந்து சென்று கொண்டிந்த போது, பின்னால் வந்த TN38 CM 9754 என்ற Bolero pickup வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் மனுதாரர் கீழே விழுந்து மனுதாரருக்கு எலும்புமுறிவும் கொடுங்காயங்களும் ஏற்பட்டதாக மனுதாரர் தனது சாட்சியத்தை முன் வைத்துள்ளார். மேற்கண்ட மனுதாரரை 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்திருந்த போதிலும் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதை எவ்வகையிலும் விலக்கும் வகையில் இல்லை. அதோடு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதாக 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியம், சான்றாவணங்களை இந்த தீர்ப்பாயத்தில் முன்னிலைப்படுத்தவில்லை மேற்கண்ட பொருண்மைகளை ஒன்றிணைத்து பரிசீலனை செய்கையில் இவ்வழக்கு விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என முடிவு செய்வது தான் நீதியின் பால் சிறந்ததாக இருக்கும் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

**11). <u>எழுவினா (ஆ) விற்கான விவாதமும் தீர்வும்</u>**

**<u>மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எந்தெந்த தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர் ?</u>**

இவ்விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதாக இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வந்துள்ளதால் மேற்படி விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு பெற மனுதாரர் உரிமை உள்ளவரென இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

மனுதாரர் எந்தெந்த தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர் என்பது குறித்து இந்நீதிமன்றத்தின் முடிவு பின்வருமாறு.

**(i) பகுதி நிரந்தர ஊனத்திற்காக :**

12). மனுதாரருக்கு விபத்தில் முதுகு எலும்பில் எலும்புமுறிவு ஏற்பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சேர்த்து மொத்தம் 12 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளாரென்பது மனுதாரர் தரப்பு ம.சா.ஆ. 5 முதல் ம.சா.ஆ. 10 வரையிலான சான்றாவணங்களான காயச்சான்றிதழ், விடுவிப்புகுறிப்பு மற்றும் மருத்துவச்செலவு ரசீதுகள் ஆகியவற்றிலிருந்து மிகத் தெளிவாகிறது. மேலும், மனுதாரருக்கு எலும்புமுறிவுகள் ஏற்பட்டிருந்த போதிலும் அவருக்கு ஊனம் ஏற்பட்டதை நிரூபிக்க ஏதுவாக மனுதாரரை மருத்துவக் குழு முன்பாக முன்னிலையாக பலமுறை வாய்ப்பளித்தும் முன்னிலையாகவில்லை. மருத்துவக்குழு ஊனத்தின் தன்மையை தீர்மானிக்காத நிலையில் நீதிமன்றமே மனுதாரரின் ஊனத்தை யூகமாக தீர்மானிக்க இயலாது. ஆகவே நிரந்தர ஊனம் என்ற வகையில் மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**(ii) வலி மற்றும் வேதனைக்காக :**

13). 57 வயது நிரம்பிய மனுதாரருக்கு விபத்தில் முதுகெலும்பில் எலும்புமுறிவு ஏற்பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் 12 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தபோதும் அதன்பிறகு அவருக்கு முழுமையாக நலமாகும் வரையிலும் அவர் தாங்கமுடியாத வலிக்கும் வேதனைக்கும் ஆளாகியிருப்பாரென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதுவும் குறிப்பாக படிக்கட்டு ஏறும்போதும், பயணம் செய்யும்

போதும் அவருக்கு ஏற்படும் வலியை சொல்லிமாளாது. மேலும், எதிர்பாராத விபத்தில் திடீரென பலத்த காயம் ஏற்படும் நிலையில் அவருக்கு ஏற்பட்ட வலியை மற்ற எந்தவொரு நபரும் புரிந்துகெள்ள இயலாது. அந்த வலியைப் பணத்தால் ஈடு செய்யவும் இயலாது. ஆகவே, மனுதாரருக்கு விபத்தில் முதுகெலும்பில் எலும்புமுறிவு ஏற்பட்டதினால் உண்டான வலி மற்றும் வேதனைக்காக ரூ. 1,20,000/-ஐ இழப்பீடாக வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**iii ) கூடுதல்ஊட்டச்சத்து :**

14). 57 வயது நிரம்பிய மனுதாரருக்கு விபத்தில் முதுகெலும்பில் ஏற்பட்ட எலும்புமுறிவு முழுமையாக குணமாகி அதன்பிறகு சாதராண வேலைகளைச் செய்யும் நிலைக்கு ஆளாக குறைந்தபட்சம் 05 மாதங்களாவது ஆகியிருக்கும் என்ற வகையிலும் எப்படி எடுத்துக்கொண்டாலும் குறைந்தபட்சம் மனுதாரரின் ஊட்டச்சத்திற்காக ரூ. 15,000/- செலவாகியிருக்கும். ஆகவே மனுதாரரின் ஊட்டச்சத்து செலவிற்காக ரூ. 15,000/- ஐ இழப்பீடாக வழங்கலாமென இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**iv ) உதவியாளர் கட்டணம் :**

15). மனுதாரருக்கு விபத்தில் முதுகெலும்பில் ஏற்பட்ட எலும்புமுறிவு முழுமையாக குணமாக 05 மாதங்களாவது ஆகியிருக்கும். மனுதாரர் 12 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற சமயத்தில் அவரது உறவினர்களே அவரை கவனித்துக் கொண்டிருந்திருப்பார்கள் என்ற போதிலும் அவர்கள் தங்களது வேலையை விட்டு முழு நேரப் பணியாகவோ அல்லது பகுதிநேரப்பணியாகவோ இப்பணியைச் செய்திருப்பார்கள். அதன் மூலம் மனுதாரரின் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 18,000/-

இழப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவே மனுதாரருக்கு முற்றிலும் குணமாகும் வரையிலும் அவருக்கு உதவியாளராக இருந்ததற்கான செலவிற்காக ரூ 18,000/- ஐ இழப்பீடாக வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**V) பயணச் செலவு :**

16). விபத்து ஏற்பட்ட சமயத்திலிருந்து முழுமையாக குணமாகும் வரையிலும் மனுதாரர் மருத்துவமனைக்கு பலமுறை சென்று வந்திருப்பார். அதுவும் குறிப்பாக முதுகெலும்பில் எலும்புமுறிவு ஏற்பட்ட மனுதாரர் காரிலேயே சென்றிருப்பார். ஆகவே, அவரது பயணச் செலவிற்காக வேண்டி ரூ. 10,000/- ஐ இழப்பீடாக வழங்கலாமென இத்தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**vi) மருத்துவச் செலவு :**

17). மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவுகளாக உரைத்து மருத்துவச் செலவு ரசீதுகள் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ. **5** மற்றும் ம.சா.ஆ. **10** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ ரசீதுகளிலிருந்து மனுதாரருக்கு ரூ. 28,240/- மருத்துவச் செலவு ஏற்பட்டுள்ளது என்பது புலனாகிறது. மேலும், மனுதாரருக்கு மருத்துவமனை செலவுகள் என்ற வகையில் மேற்கண்ட செலவல்லாமல் மேலும் கூடுதலான செலவும் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. ஆகவே மனுதாரருக்கு மருத்துவச் செலவு என்ற வகையில் ரூ. 29,000/- ஐ இழப்பீடாக வழங்கலாமென இந்த தீர்ப்பாயம் முடிவிற்கு வருகிறது.

**Viii) வருமான இழப்பு**

18). மனுதாரருக்கு விபத்தில் முதுகெலும்பில் ஏற்பட்ட எலும்புமுறிவுகள்

முழுமையாக குணமாகி அவர் தனது அன்றாட வேலைகளைச் செய்வதற்கு குறைந்தது 05 மாதங்களாவது ஆகியிருக்கும். மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் விபத்து சமயம் மனுதாரர் கூலி வேலை செய்து மாதம் ரூ. 20,000/- சம்பாதித்து வந்ததாக வெறுமனே வாதுரைக்கப்பட்டதே தவிர மேற்கண்ட கூற்றை நிரூபிக்க ஏதுவாக மனுதாரர் தரப்பில் உரிய சாட்சியங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. இருந்த போதிலும் 57 வயதான ஒரு ஆண் தனது குடும்பத்தை நடத்த குறைந்தபட்சம் தினம் ரூ. 500/- வது சம்பாதித்து வந்திருக்க வேண்டும். மாதம் 25 நாட்கள் அவர் வேலைக்கு செல்லும்பட்சத்தில் மாதமொன்றுக்கு சுமார் ரூ. 12,500/- வது சம்பாதித்து வந்திருப்பார். ஆகவே, மனுதாரருக்கு வருமான இழப்பு என்ற வகையில் ரூ. 62,500/- ஐ (5X ரூ.12,500/-) இழப்பீடாக வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும்.

19). மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் கருத்திற்கொண்டு மனுதாரருக்கு கீழ்க்கண்ட வகையில் இழப்பீடு வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

| | | |
|---|---|---|
| வலி மற்றும் வேதனைக்காக : | ரூ. | 1,20,000/- |
| கூடுதல் ஊட்டச்சத்து : | ரூ. | 15,000/- |
| உதவியாளர் கட்டணம்: | ரூ. | 18,000/- |
| பயணச் செலவு : | ரூ. | 10,000/- |
| மருத்துவச் செலவு : | ரூ. | 29,000/- |
| வருமான இழப்பு : | ரூ. | 62,500/- |
| மொத்தம் : | ரூ. | 2,54,500/- |

20). **எழுவினா (இ) விற்கான விவாதமும் தீர்வும்**

**மனுதாரருக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?**

2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்படவில்லை என்றோ, 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளை மீறி நடந்தாரென்றோ, 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் முன் வைக்கப்படாததால் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை 2ம் எதிர்மனுதாரருக்காக வேண்டி 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவரென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருவது தான் நீதியின்பால் சிறந்ததாக இருக்கும்.

*21). **இறுதியாக,***

*01). மனுதாரருக்கு ரூ. 2,54,500/-ஐ இழப்பீடாக வழங்கவும் மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த 06.01.2024 முதல் தொகையை வைப்பீடு செய்யும் தேதிவரை, ஆண்டொன்றிற்கு 7.5% வட்டி வழங்கவும் வழக்குரைஞர் கட்டணம் மற்றும் நீதிமன்ற கட்டணத்திற்கான தொகையை செலவுத் தொகையாக வழங்கவும் 3ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை 1 மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென 3-ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையை பாரத ஸ்டேட் வங்கி **IFSC Code : SBIN0004266**, Virtual Acooount - **MTPSUB-**, ல் செலுத்த ஆணையிடப்படுகிறது.*

*02). தொகை செலுத்தப்பட்ட விபரத்தை தீர்ப்பாயத்தின் cbemtp.sc-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப ஆணையிடப்படுகிறது. மேற்கண்ட தொகையை வைப்பீடு செய்த உடன் மனுவின் பெயரில் மனுதாரரின் வங்கி*

*கணக்கிற்கு மாறுதல் செய்ய ஆணையிடப்படுகிறது.*

*03). நீதிமன்ற கட்டணமாக ரூ. 1,917/- ஐ மனுதாரர் செலுத்த வேண்டும் வழக்குரைஞர் கட்டணமாக ரூ. 9,590/- என* ***TamilNadu Legal Authority Act Circular dated 17.10.2016 and Rule 25 ( 6) of Tamilnadu Motor Vehicles Accident Claims Tribunals Rules 1989*** *- ன் படி நிர்ணயம் செய்யப்படுகிறது. உத்தரவின் நகலை (இலவச நகல் உள்ளிட்ட) முழு நீதிமன்றக் கட்டணத்தையும் செலுத்திய பிறகு மனுதாரருக்கு அளிக்க ஆணையிடப்படுகிறது.*

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

**Sd/- K. பழனிவேல்,**

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்**
**மற்றும் சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

**1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் பட்டியல் :-**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1). | திரு. நாகராஜ் | ம.சா.1 |

**2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1). | --- | முதல் தகவல் அறிக்கை | ம. சா. ஆ.1 | நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2). | --- | குற்றப்பத்திரிக்கை | ம. சா. ஆ.2 | நகல் |
| 3). | --- | மாதிரி வரைபடம் | ம.சா. ஆ.3 | நகல் |
| 4). | --- | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | ம.சா. ஆ.4 | நகல் |
| 5). | --- | மருத்துவச் செலவு ரசீது | ம. சா. ஆ.5 | அசல் |
| 6). | --- | காயச்சான்றிதழ் | ம. சா. ஆ.6 | நகல் |
| 7). | --- | விடுவிப்பு குறிப்பு | ம. சா. ஆ.7 | நகல் |
| 8). | --- | M.R.I. scan Report | ம. சா. ஆ.8 | அசல் |
| 9). | --- | விடுவிப்பு குறிப்பு | ம. சா. ஆ.9 | நகல் |
| 10). | --- | மருத்துவச் செலவு ரசீது | ம. சா. ஆ. 10 | அசல் |
| 11). | --- | ஆதார் அடையாள அட்டை | ம. சா. ஆ. 11 | நகல் |
| 12). | --- | குற்றவியல் நடுவர் நீதிமன்ற தீர்ப்பு | ம. சா. ஆ. 12 | நகல் |

**3). எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்**

| **வ. எண்** | **சாட்சி பெயர்** | **சாட்சிய வரிசை** |
|---|---|---|
| | --- இல்லை --- | |

**4). எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** :-

| **வ.எண்** | **தேதி** | **சான்றாவணங்கள்** | **ஆவண வரிசை** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|---|
| | | --- இல்லை -- | | |

**Sd/- K. பழனிவேல்,**

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம்**

**மற்றும் சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

*எம்.சி.ஓ.பி.எண். 20/2023*

09.03.2026

**சீரான உத்தரவு**